DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. STC.No.99/2023**

**prosecution witness: PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused absent. Petition filed.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரத்தினவேல் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

03.10.2024

முதல் விசாரணை:-

நான் தற்போது தங்கச்சிமடம் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகீறேன். கடந்த 19.07.2021ம் தேதி பாம்பன் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்தபோது 13.45 மணிக்கு பாம்பன் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.முனியாண்டி அவர்களுக்கு பாம்பன் இரயில்நிலையம் அருகே கஞ்சா விற்பனை செய்து வருவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் என்னையும், காவலர் 2022 திரு.சத்தியேந்திரனையும் அழைத்துக்கொண்டு நிலையத்தில் இருந்து தேவையான உபகரணங்கள் பெறப்பட்டு 14.00 மணிக்கு பாம்பன் இரயில் நிலையம் அருகில் ரோந்து சுற்றி கண்காணித்து வந்தபோது மேற்படி இடத்தில் பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட தங்கச்சிமடம் மாந்தோப்பை சேர்ந்த அந்தோணிச்சாமி மகன் ராயப்பன் என்பவர் கையில் பச்சைநிற பாலீதீன் பையுடன் நின்றிருந்தவர் போலீஸ் பார்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை போலீஸ் பார்டி சகிதம் மடக்கி பிடித்து சார்பு ஆய்வாளர் அவர்கள் தங்களிடம் கஞ்சா இருப்பதாக தெரியவருகிறது தங்களை சோதனை செய்ய அரசு அதிகாரம் பெற்ற அதிகாரிகளிடமோ, அரசு பதிவு பெற்ற அதிகாரியிடம் எவரிடமோ அழைத்து சென்று சோதனை செய்ய தங்களுக்கு உரிமை உண்டு என்று ராயப்பன் இல்லை தாங்களே சோதனை செய்து கொள்ளலாம் என்று கூறியதன் பேரில்

பிரிவு.50(1) NDPS Act ன்படி சோதனை சம்மதக் கடிதம் தயார் செய்து அதில் கையொப்பம் பெற்று மேற்படி ராயப்பன் கையில் வைத்திருந்த பாலீதின் பையை வாங்கி சோதனை செய்தபோது அதில் அரசால் தடைசெய்யப்பட்ட இலை, காய், பூ, தண்டு ஆகியவைகளுடன் கூடிய போதைப்பொருளான நுகர்ந்ததால் மனித மனநிலை பாதிக்கக்கூடிய கஞ்சா வைத்திருந்தது தெரிய வந்தது.

2. மேற்படி போதைப்பொருளான கஞ்சாவை எடைபோட்டு பார்த்ததில் சுமார் 80 கிராம் இருந்ததது. மேற்படி சொத்தை கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் போலீஸ் பார்டிகளில் இருந்த என்னையும், காவலர் சத்தியமூர்த்தி என்பவரையும் சாட்சிகளாக நியமித்து அத்தாட்சி தயார் செய்து மேற்படி கஞ்சாவை கைப்பற்றினார்கள். அத்தாட்சியில் நானும், காவலர் சத்தியமூர்த்தி என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையொப்பம் அ.சா.ஆ.1** ஆகும்.

3.மேற்படி கஞ்சாவில் ரசாயன பரிசோதனைக்காக தலா சுமார் 10 கிராம் வீதம் தலா 2 பொட்டலங்கள் பாலீதீன் கவரில் எடுத்து காக்கி பேப்பரில் மடித்து வெள்ளை நூலில் கட்டி போலீஸ் பட்டன் சீல் வைத்தும் மீதமிருந்த 60 கிராம் கஞ்சாவை பாலீதின் கவரில் வைத்து காக்கி பேப்பரில் மடித்து வெள்ளை நூலில் கட்டி போலீஸ் பட்டன் சீல் வைத்தும் மேற்படி எதிரி மற்றும் சொத்துக்களை பாம்பன் காவல்நிலையத்திற்கு 14.45 மணிக்கு கொண்டு வந்து பாம்பன் காவல்நிலையக் குற்ற எண்.185/21 பிரிவு.8(C) r/w20(b)(2)(A) NDPS Act படி வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1.எதிரியையும், சொத்தையும் காவல்நிலையத்திற்கு 14.45 மணிக்கு என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம்.3(b)ல் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த நேரம் மற்றும் நாளில் 14.45 மணி hours என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2.ரகசிய தகவல் கிடைத்து நேரடியாக சம்பவ இடமான பாம்பன் இரயில் நிலையத்திற்கு சென்று எதிரியை கைது செய்தோமா என்றால் இல்லை வேறு இடத்திற்கு ரோந்து சென்றுவிட்டு தான் கைது செய்தோம். எதிரி எங்களை பார்த்து எவ்வளவு தூரம் ஓடினோம் என்றால் 10-20 மீட்டர் தூரம் ஓடியிருப்பார். அவரை நானும், காவலர் சத்தியேந்திரனும் விரட்டி பிடித்தோம்.

3.நான் சொல்லும் மதியம் 01.45 மணிக்கு பாம்பன் இரயில் நிலையத்தில் மக்கள் அதிகமாக நடமாடும் பகுதி என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட கஞ்சாவை அதே இடத்தில் சீல் வைத்தது பொதுமக்களுக்கு தெரியுமா என்றால் பார்த்திருக்கலாம். எதிரியிடம் நாங்கள் உன்னை சோதனை செய்யலாம் என்று கேட்டபின்பு எதிரியிடம் ஒரு படிவம் கொடுத்து கையொப்பம் வாங்கியதாக சொல்லியுள்ளதில் அதனை சார்பு ஆய்வாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா

என்றால் இல்லை.

4. நான் சொன்ன நாளன்று இராமேஸ்வரம் உட்கோட்டத்தில் எல்லா காவல்நிலையங்களிலும் புள்ளிவிபரத்திற்காக அந்த மாதிரி கஞ்சா வழக்குபோடப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஏற்கனவே இதுபோன்ற வழக்கு உள்ள நபர்கள் மீது புள்ளிவிபரத்திற்காக இதுபோன்ற வழக்கு போடுவது வழக்கம் என்றால் இல்லை.

5. நான் சொல்வது போல் எந்த சம்பவமோ, குற்ற நிகழ்வும் எதிரி செய்யவில்லை புள்ளிவிபரத்திற்காக சார்பு ஆய்வாளரால் போடப்பட்டட வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்றேின் என்றால் சரியல்ல. என்னை சார்பு ஆய்வாளர் எத்தனை நாள் கழித்து விசாரித்தார் என்றால் அன்றைய தினமே விசாரித்துவிட்டார். நான் தற்போது முதல்விசாரணையில் சொன்னததைத்தான் சார்பு ஆய்வாளர் விசாரிக்கும்போது வாக்குமூலத்தில் சொன்னேன் என்றால் சரிதான்.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.10.03 16:56:29 +0530

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. STC.No.99/2023**

**prosecution witness: PW-2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**Accused absent. Petition filed.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சத்தியேந்திரன் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>03.10.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது இராமேஸ்வரம் போக்குவரத்து காவல்நிலையத்தில் முதல்நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு பாம்பன் காவல்நிலையத்தில் காவலராக பணிபுரிந்தபோது கடந்த 19.07.2021ம் தேதி மதியம் 13.45 மணியளவில் பாம்பன் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.முனியாண்டி அவருக்கு பாம்பன் இரயில் நிலையம் அருகே கஞ்சா விற்பனை செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் சார்பு ஆய்வாளர், தலைமைக் காவலர் 1840 திரு.ரத்தினவேல் மற்றும் நான் ஆகியோர் தேவையான உபகரணங்களுடன் 14.00 மணியளவில் பாம்பன் இரயில் நிலையம் அருகில் ரோந்து சுற்றி வரும்போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த தங்கச்சிமடம் மாந்தோப்பைச் சேர்ந்த அந்தோணிச்சாமி மகன் ராயப்பன் என்பவர் கையில் பச்சை நிற பாலீதின் பையுடன் நின்றிருந்தார். போலீஸ் பார்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை போலீஸ் பார்டி சகிதம் மடக்கி பிடித்து சார்பு ஆய்வாளர் அவர்கள் தங்களிடம் கஞ்சா இருப்பதாக தெரியவருகிறது தங்களை சோதனை செய்ய அரசு அதிகாரம் பெற்ற அதிகாரிகளிடமோ, அரசு பதிவு பெற்ற அதிகாரியிடம் எவரிடமோ அழைத்து சென்று சோதனை செய்ய தங்களுக்கு உரிமை உண்டு என்று ராயப்பன் இல்லை தாங்களே சோதனை செய்து கொள்ளலாம் என்று கூறியதன் பேரில் பிரிவு.50(1) NDPS Act ன்படி சோதனை சம்மதக் கடிதம் தயார் செய்து

அதில் கையொப்பம் பெற்று மேற்படி ராயப்பன் கையில் வைத்திருந்த பாலீதின் பையை வாங்கி சோதனை செய்தபோது அதில் அரசால் தடைசெய்யப்பட்ட இலை, காய், பூ, தண்டு ஆகியவைகளுடன் கூடிய போதைப்பொருளான நுகர்ந்ததால் மனித மனநிலை பாதிக்கக்கூடிய கஞ்சா வைத்திருந்தது தெரிய வந்தது.

2. மேற்படி போதைப்பொருளான கஞ்சாவை எடைபோட்டு பார்த்ததில் சுமார் 80 கிராம் இருந்ததது. மேற்படி சொத்தை கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் போலீஸ் பார்டிகளில் இருந்த என்னையும், தலைமைக் காவலர் திரு.ரத்தினவேல் என்பவரையும் சாட்சிகளாக நியமித்து அத்தாட்சி தயார் செய்து மேற்படி கஞ்சாவை கைப்பற்றினார்கள். அத்தாட்சியில் நானும், தலைமைக் காவலர் திரு.ரத்தினவேல் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையொப்பம் அ.சா.ஆ.2** ஆகும்.

3.மேற்படி கஞ்சாவில் ரசாயன பரிசோதனைக்காக தலா சுமார் 10 கிராம் வீதம் தலா 2 பொட்டலங்கள் பாலீதீன் கவரில் எடுத்து காக்கி பேப்பரில் மடித்து வெள்ளை நூலில் கட்டி போலீஸ் பட்டன் சீல் வைத்தும் மீதமிருந்த 60 கிராம் கஞ்சாவை பாலீதின் கவரில் வைத்து காக்கி பேப்பரில் மடித்து வெள்ளை நூலில் கட்டி போலீஸ் பட்டன் சீல் வைத்தும் மேற்படி எதிரி மற்றும் சொத்துக்களை பாம்பன் காவல்நிலையத்திற்கு 14.45 மணிக்கு கொண்டு வந்து பாம்பன் காவல்நிலையக் குற்ற எண்.185/21 பிரிவு.8(C) r/w20(b)(2)(A) NDPS Act படி வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1.சார்பு ஆய்வாளருக்கு தகவல் கிடைத்த நேரம் 13.45 மணி ஆகும், 14.45 மணிக்கு கிடைத்தது என்று சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான். நேரடியாக சம்பவ இடத்திற்கு சென்று சார்பு ஆய்வாளரும், நாங்களும் எதிரியை கைது செய்தோமா என்றால் நேரடியாக சென்று சோதனை செய்து எதிரியை கைது செய்தோம். அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 14.00 மணி இருக்கும். பாம்பன் இரயில்நிலையத்தில் அப்போது பொதுமக்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி என்றால் சரிதான். நாங்கள் எதிரியை பிடித்து சோதனை செய்த விபரம் பொதுமக்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதனால் தான் அத்தாட்சியில் நானும், அ.சா.1ம் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். எதிரி எங்களை பார்த்ததும் எவ்வளவு துாரம் ஓடினார் என்றால் ஓடவில்லை. காவல்நிலையம் வரும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 14.45 மணி இருக்கும்.

2. நான் சொல்லும் காலகட்டத்தில் புள்ளிவிபரத்திற்காக இதுபோன்ற வழக்குகள் போடுவது வழக்கம் என்றால் தெரியவில்லை. கஞ்சாவின் பூ, இலை, காய், தண்டு ஆகியவற்றை பற்றி தெரியுமா என்றால் தெரியும். இதில் இலை மட்டும்தான் போதை ஏற்படுத்தக்கூடியது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து அதை யார் நுகர்ந்து பார்த்தால் என்றால் சார்பு ஆய்வாளர்தான் நுகர்ந்து பார்த்தார். அவர் மட்டும் நுகர்ந்து பார்த்ததால் அவருக்கு மட்டும தான் போதை பொருள் என்று தெரியும் என்றால் அந்த

பொருள் போதை பொருள் என்று சார்பு ஆய்வாளர் சொன்னதால் எனக்கு தெரியும்.

நான் சொல்வது போல் எந்த சம்பவமோ, குற்ற நிகழ்வும் எதிரி செய்யவில்லை புள்ளிவிபரத்திற்காக சார்பு ஆய்வாளரால் போடப்பட்டட வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.10.03 16:56:43 +0530

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. STC.No.99/2023**

**prosecution witness: PW-3**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused absent. Petition filed.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>03.10.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் இராமநாதபுரம் போதைதடுப்பு நுண்ணறிவுப்பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகீறேன். இதற்கு முனபு கடந்த 30.09.2021ம் தேதி பாம்பன் நிலைய குற்றஎண்.185/21, பிரிவுகள். 8(c), 20(b)(ii) NDPS Act வழக்கின் சொத்தினை கனம் இராமேஸ்வரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் பெற்று இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு RMD/NR/193ன் படி சொத்தை தடய ஆய்வகத்தில் ஒப்படைத்து 01.10.2021ம் தேதி அறிக்கை பெற்று ஆய்வறிக்கையை 28.10.2021ம் தேதி கனம் இராமேஸ்வரம் நீதித்துறை நடுவர் முன்பு மூடி முத்திரையிடப்பட்ட 28.10.2021ம் தேதி ஆய்வறிக்கை பெற்று நீதிமன்றத்திற்கும், பாம்பன் காவல்நிலையத்திற்கும் ஒப்படைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1.சார்பு ஆய்வாளர் கூறிய பணியை தவிர மற்ற இந்த வழக்கு விபரம் எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.10.03 16:56:51 +0530